# அனகாபுத்தூர் நகராட்சி

## சென்னை – 600 070.

கூட்ட எண்.56/2020 நாள். 28.02.2020

## தனி அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2020 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

28.02.2020ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரணக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சி பிப்ரவரி 2020 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | பிப்ரவரி 2020 | 0 | 0 | 13 | 6 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜனவரி 2020 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

வார்டு வரையறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள நிலவியல் ரீதியான அமைப்பினை கருத்திற்கொண்டும், தெருக்கள் / நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினைக் கருத்திற்கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக மாவட்ட ஆட்சித்தலைவர் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, வரைவு கருத்துரு மாவட்ட மறுவரையறை அலுவலர் பரிசீலனைக்குப்பின் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்கக் கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களில் அறிவிப்பு பலகைகளில் 01.02.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பல்வேறு கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் குறிப்பிட்டு நேரடியாகவும், தபால் மூலமாகவும், மின் அஞ்சல் வழியாகவும் இந்நகராட்சியில் 01.02.2020 முதல் 0.02.2020 வரை பெறப்பட்டது. பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களால் 15.02.2020 அன்று நடத்தப்பட்ட பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் மற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தால் செங்கல்பட்டு

மாவட்டத்தில் 27.02.2020 அன்று நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திலும் சேர்த்து மொத்த 6 மனுக்கள் வரப்பெற்றது. மேற்கண்டவாறு வரப்பெற்ற 6 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மறு ஆய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. இதன்படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுவதுடன், இக்கருத்துருவினை மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு : -</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 4</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கஸ்தூரி பாய் நகர் சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை கட்டப்பட்டுள்ளது. மேற்படி நவீன எரிவாயு தகன மேடையினை சடலத்தை எரிக்க தன்னார்வு தொண்டு நிறுவனம் மூலம் நடத்திட உத்தேசிக்கப்பட்டு யாவரும் முன்வராத காரணத்தால், பிற நகராட்சிகளில் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை ஆராய்ந்து செயல்படுத்துமாறு உயர் அலுவலர்களால் அறுவுறுத்தப்பட்டது. இந்நிலையில் கைலாய நாதர் அறக்கட்டளை நிறுவனம் நவீன எரிவாயு தகனமேடை நடத்திடவும், அதற்கு ஒரு சடலத்தை எரியூட்ட ரூ.4000/—க்கு 2019—20ம் நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டு 29.02.20 அன்று முடிவடைகிறது. மேற்படி நிறுவனம் தொடர்ந்து நடத்திடவும், ஒரு சடலத்திற்கு எரியூட்ட ரூ.4000/—ஐ பொது மக்களிடமிருந்து பெற அனுமதிக்க கோரி கடிதம் வழங்கியுள்ளதை தொடர்ந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. மேற்படி தொகை ரூ.4000/—த்தை பொதுமக்களிடம் இருந்து பெற்று கொள்ள கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஒரு வருட காலத்திற்கு உத்தரவு வழங்கிட கூட்டம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1. | எரிவாயு தகனமேடையை அறக்கட்டளையே நடத்தப்பட வேண்டும். குத்தகைக்கு விடக்கூடாது. |
| 2. | எரிவாயு மயானம், காரியங்கள் இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களும் நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக் கூடாது. எந்த சட்டவிரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக் கூடாது. |
| 3. | ஒலி, ஒளி பெருக்கினை அறக்கட்டளை பயன்படுத்தக்கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் இதர சட்டவிதிமுறைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும். |
| 4. | மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலுமச் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும். |

| | |
|---|---|
| 5. | எரியூட்டும் இயந்திர புகைபோக்கிகள் புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும். |
| 6. | நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை ஆணையாளர் / சுகாதார ஆய்யவாளர் மற்றும் நிறுவனத்தைச் சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம் இலாப நோக்கமின்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். |
| 7. | ஜாதி, மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும். |
| 8. | எரிவாயு மயானத்தை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை ஏற்க வேண்டும். |
| 9. | எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை எவ்வித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது. |
| 10. | எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்ட பிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும். |

**<u>அலுவலக குறிப்பு :</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நவீன எரிவாயு தகனமேடையில் சடலங்களை எரியூட்டும் பணியை மேற்கொள்ள கைலாய நாதர் அறக்கட்டளை என்ற நிறுவனத்திற்கு மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்டகஸ்துாரி பாய் நகர் சுடுகாட்டில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையை மாதம் ஒரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை இயந்திரங்களை பணியாளர்கள் கொண்டு ஆய்வு செய்து பொருட்கள் மாற்றுவது மற்றும் பராமரிப்பு பணி செய்திட சம்மதம் தெரிவித்து எஸ்.ஜி.எஸ். சர்வீசஸ் அறக்கட்டளை சென்னை என்ற நிறுவனம் அனுமதி கோரியும் கடிதம் கொடுத்துள்ளது. இயந்திரங்களை பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒராண்டிற்கு ரூ.150000/-ஐ வழங்க கோரியுள்ளனர். எனவே கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஒப்படைக்கப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு பராமரிக்க உத்தரவு வழங்கிட கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

| | |
|---|---|
| 1 | எரிவாயு தகனமேடையை அறக்கட்டளையே பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டும். |
| 2 | மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும |

| | |
|---|---|
| | சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும். |
| 3 | எரியூட்டும் இயந்திர புகைபோக்கிகள் புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும். |
| 4 | எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை எவ்வித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது. |
| 5 | முதல் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 1 வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாக சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணபத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து / நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும். |
| 6 | பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலை செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும்பொழுது இதற்கு எவ்வித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது. |
| 7 | பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை தனியார் நிறுவனங்கள் தாங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள் / கட்டிடங்களுக்கு எவ்வித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும். |
| 8 | மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப் பத்திரம் உள்ளாட்சிக்கு எழுதிக் கொடுக்க வேண்டும். |
| 9 | மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும். |

**அலுவலக குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 6**

26.02.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் டேங்கர் லாரிக்கு ஓட்டுநர் 2 நபர், கிளினர்கள் 2 நபர்கள் மற்றும் செங்கழுநீர் மலை குவாரியில் இரவு காவலர் 2 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்தல் | 9.90 | பேன்ஸி எண்டர்பிரைசஸ்<br>அல்மாஸ் டிரேடர்ஸ் | குறைவு<br>அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | பொது சுகாதார தளவாட பொருட்கள் வார்டு எண்.1 முதல் 9 வரை விநியோகம் செய்தல் | 9.90 | கிருத்திகா அசோசியேட்ஸ்<br><br>தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் லிட் | குறைவு<br><br>அதிகம் |
| 3 | பொது சுகாதார தளவாட பொருட்கள் வார்டு எண்.10 முதல் 18 வரை விநியோகம் செய்தல் | 9.80 | கிருத்திகா அசோசியேட்ஸ்<br><br>தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் லிட் | குறைவு<br><br>அதிகம் |
| 4 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் மற்றும் கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான ஆட்களை சப்ளை செய்தல் | 9.50 | பேன்ஸி எண்டர்பிரைசஸ்<br><br>அல்மாஸ் டிரேடர்ஸ் | குறைவு<br><br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>**பொருள் எண். 7**</u>

27.02.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், கணிணி பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் அச்சடித்து வழங்குதல் | 9.90 | மடிபாக்கம் ஸ்டேசனரி ரிஜிஸ்டர்&மேக்கிங் இன்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட்<br>டிஜிட்டல் இந்தியா ஸ்பீடு இன்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட் | குறைவு<br><br>அதிகம் |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 9 வரை அமைக்கப்பட்டுள்ள 11 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு பணி செய்தல் | 6.00 | ஓசோன் டெக்னாலஜிஸ்<br>ஐ டெக் சுவிட் வாட்டர் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் | 0.10% குறைவு<br>1.40% அதிகம் |
| 3 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10 முதல் 18 வரை அமைக்கப்பட்டுள்ள 11 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை | 6.00 | ஓசோன் டெக்னாலஜிஸ்<br>ஐ டெக் சுவிட் வாட்டர் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் | 0.10% குறைவு<br>1.40% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பராமரிப்பு பணி செய்தல் | | | |
| 4 | அரசு பள்ளிகளின் கழிவறைகள் பராமரிப்பு பணிகள், துப்புரவு பணிகள் செய்ய பணியாளர்களை சப்ளை செய்தல் மற்றும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் பணி | 9.90 | பேன்ஸி ஏஜென்சி<br>அல்மாஸ் டிரேடர்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 5 | தட்டச்சு, ஜெராக்ஸ் பிரதிகள், போட்டோ மற்றும் வரைப்படம் தயாரித்தல் | 2.50 | விஜய் ஜெராக்ஸ்<br>வள்ளி ஜெராக்ஸ் | குறைவு<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.8**

25.02.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>எஸ்விபி எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 2 | வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>எஸ்விபி எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 3 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கை மின் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 9.80 | லட்சுமி எண்டர்பிரைசஸ்<br>மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் | 0.10% குறைவு<br>1.30% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.9**

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பில் கீழ்காணும் வகையில் மொத்தம் 2129 எண்ணம் கொண்ட தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது

List of Street Lights under Maintenance.

| Sl.No. | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tube Lights Fitting | 681 |
| 2 | 3x36 W CFL fittings | 882 |
| 3 | 250W SV Lamp Fititings | 393 |
| 4 | 70 Watts LED Fitting | 94 |
| 5 | 100Watts LED Fitting | 51 |
| 6 | 4x24 W T5 Fittings | 28 |
| | Total | **2129** |

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய ஒரே ஒரு மின் பணியாளர் மற்றும் ஒரு மின் பணி உதவியாளர் மட்டும் இருக்கும் காரணத்தால், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் வரும் 31.5.2020ம் தேதியோடு முடிவடைகிறது. 2020-2021ம் ஆண்டிற்கு மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்காள தோராய செலவினம் மூலம் 44.03 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி பெற அதற்கான பிரேரனையை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம். செலவின தொகையை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

28.02.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணி குறித்த அறிக்கை படிவம் (200 பக்கங்கள் கொண்ட புத்தகம் பைண்டிங் உடன் A5 size) | 1.00 | பேன்ஸி ஏஜென்சி அல்மாஸ் டிரேடார்ஸ் | குறைவு அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.11**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பசுமை உரக்குடிலில் உள்ள எரியூட்டப்பட தகுதியான | 9.90 |

| | | |
|---|---|---|
| | கழிவுகளை அரியலூர் மாவட்ட சிமெண்ட் நிறுவனத்திற்கு பேக்கிங் செய்து அனுப்ப தேவையான பொருட்கள் சப்ளை செய்தல் பணி | |
| 2. | பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு புகை போக்கி இயந்திரத்தினை ஏற்றி கொசு மருந்து அடிக்கும் பணிக்கு வாடகை அடிப்படையில் ஒரு எண்ணிக்கை Tata Ace ஆட்டோ வாகனம் சப்ளை செய்தல் பணி | 7.50 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பூந்தண்டலம் விவசாய கிணற்றில் இருந்து நகராட்சி லாரி மூலம் குடிநீர் எடுத்தல் பணி | 9.90 |
| 2. | கல்மடுவு, அன்னை பிளாட்ஸ் அருகில் உள்ள வாம்பே நவீன கழிப்பிடம் (Toilet) அபிவிருத்தி செய்யும் பணி | 2.50 |
| 3. | வார்டு எண்.4, வெங்கடேஸ்வரா நகர் கண்ணகி 3வது குறுக்கு தெருவில் சிமெண்ட சாலை அமைத்தல் பணி | 2.20 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.13</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு தனியார் மூலம் வாடகை அடிப்படையில் டாடா ஏஸ் வாகனம் 2018–2019ம் ஒப்பந்தபுள்ளி விலைவிகிதத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்படி விலைவிகிதத்தில் வாகனம் விநியோகம் செய்யவும் அதற்கான செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

அனகாபுத்தூர் நகராட்சியின் மக்கள் தொகை (2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி) 48050 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 52000 ஆகும். மக்கள் தொகை கணக்கீட்டின்படி தேவைப்படும் குடிநீரின் அளவு 4.32 MLD ஆகும். அனகாபுத்தூர் நகராட்சி பொது மக்களுக்கு செங்கழுநீர்மலை கல்குவாரி பள்ளம் மூலம் 8.00 இலட்சம் லிட்டர், சென்னை பெருநகர குடிநீர்

வாங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் **5.00** இலட்சம் லிட்டர் மற்றும் பூந்தண்டலம் கிராமத்தில் உள்ள விவசாய கிணற்றில் இருந்து நகராட்சி லாரிகள் மூலம் **0.90** இலட்சம் லிட்டர் ஆக மொத்தம் **13.90** இலட்சம் லிட்டர் தினசரி குடிநீர் பெறப்பட்டு மூன்று குடிநீர் மேல்நிலை தொட்டிகளில் நிரப்பப்பட்டு பகுதி வாரியாக 7 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு வடகிழக்கு பருவமழையும் போதிய அளவிற்கு பொய்யாததாலும் வறட்சியைக் கருத்தில் கொண்டும் குடிநீர் பிரச்சனையை சமாளிக்கும் பொருட்டு, உரிய வழிமுறைகளை பின்பற்றி பூந்தண்டலம் விவசாய கிணற்றில் இருந்து நகராட்சி லாரிகள் மூலம் குடிநீர் எடுத்துக்கொள்ள பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வந்த ஒப்பந்ததாரர் திரு.எம்.நித்தியானந்தம் அவர்களுக்கு வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே தொடர்ந்து குடிநீர் எடுத்துக்கொள்ள ரூ.**3.00** இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.**603, 31.10.2019**–ல் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணி பிப்ரவரி **2020**ல் நிறைவடைவதாலும், குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, ஏற்கனவே பணி உத்தரவு வழங்கிய ஒப்பந்ததாரர் மூரம் அதே விலை விகிதத்திலேயே பணி நீட்டிப்பு செய்து குடிநீர் பணி மேற்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.**2.50** இலட்சம் பொதுநிதி / குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

1. பொது மக்களுக்கு தொடர்ந்து சீரான முறையில் குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே குடிநீர் வழங்கி வரும் ஒப்பந்ததாரரின் விவசாய கிணற்றிலிருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யவும், ஏற்கனவே வழங்கிய விலை விகிதத்திலேயே பணியினை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத் தொகையினை பொதுநிதி / குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.15**

**28.02.2020**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | பெறப்பட்ட ஓப்பந்தப்புள்ளி சதவிதம் (மதிப்பீட்டிற்கு) திரு/திருமதி | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | Supply of 6x6 star medium digital flex with 2 inch MS frame vertical & | 2.80 | பேன்ஸி ஏஜென்சி | அல்மாஸ் டிரேடர்ஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | Horizontal inch 3 inch MS Hallow pipe 15 feet 2 Nos with errection – 13 Nos | | | |
| 2 | இந்நகராட்சியில் உள்ள அனைத்து கணிணிகளுக்கு தேவையான இனயதள வடம் இணைப்பு (Net work cable) புதியதாக அமைத்தல் | 3.00 | இன்காம் சொலியூசன் | எஸ்.ஆர்.டி. டேட்டா சொலியூசன் |

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணிகளுக்கு வரபெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி